## பிரியாணிக் கடை வசூல் ரூ.10 லட்சம் வழிப்பறி: 6 பேர் கும்பல் கைவரிசை

**சென்னை, ஜூலை.29–**

**சங்கிலித் தொடர் பிரியாணிக் கடைகளில் விற்பனையான ரூ.10 லட்சத்தை வசூலித்து கொண்டு வந்த ஊழியரை அடித்து, உதைத்து அவரிடமிருந்து அந்தப் பணத்தை 6 பேர் கும்பலைச் சேர்ந்தவர்கள் பறித்துச் சென்றனர்.**

மண்ணடியைச் சேர்ந்தவர் சுரேந்தர் (வயது 25). அவர் அந்தப் பகுதியில் பல இடங்களில் நடக்கும் எஸ்.எஸ். பிரியாணிக் கடைகளில் விற்பனையான தொகையை வசூலித்து வந்து கடையின் முதலாளியிடம் கொடுக்கும் வேலை செய்து வந்தார். அவர் நேற்று மொத்தம் ரூ.10 லட்சத்தை வசூலித்துக் கொண்டு வியாசர்பாடி சுந்தரராஜன் தெருவில் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். அப்போது 6 பேர் கும்பல் அவரைச் சூழ்ந்து அடித்து உதைத்தனர். அவரிடமிருந்து ரூ.10 லட்சம் பணப் பையை பறித்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டனர்.

இது குறித்து வியாசர்பாடி போலீசில் புகார் கூறப்பட்டுள்ளது. போலீசார் வழக்குப் பதிவு செய்து 6 பேர் கும்பலைத் தேடி வருகிறார்கள்.

## எதிர்க்கட்சிகள் 8வது நாளாக அமளி: அத்துமீறும் உறுப்பினர்கள் மீது கடும் நடவடிக்கை: சபாநாயகர் எச்சரிக்கை

புதுடெல்லி, ஜூலை 29–

பார்லிமெண்டின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் 8வது நாளாக தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இரு அவைகளும் பிற்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவையில் அத்துமீறும் உறுப்பினர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

பார்லிமெண்ட் குளிர்கால கூட்டத்தொடர் ஜூலை 19–ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகின்றது. ஆகஸ்ட் 13–ந்தேதி வரை நடைபெறவுள்ள இந்த கூட்டத்தில் பெகாசஸ் விவகாரத்தை அவைகளில் விவாதிக்க வேண்டுமென கடந்த 8 நாட்களாக எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இன்று காலை மக்களவை கூடியவுடன், நேற்று மாலை எதிர்க்கட்சி எம்.பி.க்கள் காகிதத்தை கிழித்தெறிந்ததற்காக ஆளும் கட்சி எம்.பி.க்கள் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து இரு தரப்பினர்களும் அமளியில் ஈடுபட்டதால் 11.30 மணிவரை அவை ஒத்திவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

அப்போது அவைத்தலைவர் ஓம் பிர்லா கூறுகையில், சபையின் சில உறுப்பினர்கள் நாடாளுமன்ற விதிகளுக்கு எதிரான சம்பவங்களை தொடர்ந்து செய்கிறார்கள்.

சபையின் மாண்பை குறைக்கும் விதமாகவும் களங்கப்படுத்தும் விதமாகவும் தொடர்ந்து நடந்துகொண்டால் உறுப்பினர்களுக்கு எதிராக நான் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று அவையை ஒத்திவைப்பதற்கு முன் ஓம் பிர்லா தெரிவித்தார்.

அதேபோல், மாநிலங்களவையிலும் பெகாசஸ் விவகாரத்தை விவாதிக்க கோரி அவை தொடங்கியவுடன் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபடத் தொடங்கினர். இதனால் அவையை பிற்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.



சென்னை தலைமைச்செயலகத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் 73வது இயக்குனர் குழுக்கூட்டம், அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் தலைவர் குறிஞ்சி என்.சிவக்குமார் தலைமையில் நடந்தது. தகவல் தொழில் நுட்பவியல் துறை முதன்மை செயலாளர் நீரஜ்மித்தல், நிதித்துறை இணை செயலாளர் அருண் சுந்தர் தயாளன், எல்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அஜய் யாதவ், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வீ.ப. ஜெயசீலன், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழக மேலாண்மை இயக்குநர் எஸ்.சண்முகம் மற்றும் நிறுவன அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் உலக கல்லீரல் நோய் தடுப்பு தின விழிப்புணர்வு கருத்தரங்கம்

சென்னை, ஜூலை.29

நாடு முழுவதும் நேற்று உலக கல்லீரல் நோய் தடுப்பு தினம் அனுசரிக்கப்பட்டது. சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையிலும் உலக கல்லீரல் நோய் தடுப்பு தினம் கடைபிடிக்கப்பட்டது.

இந்தியாவில் ஏறத்தாழ 4 கோடிக்கும் மேற்பட்டோர் நாள்பட்ட கல்லீரல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. மொத்த பாதிப்பில் 43 சதவீதம் பேர் ஹெபடைடிஸ் பி வகை கல்லீரல் புற்றுநோயால் பாதிக்கப்படுவதாகவும், அதில் 42 சதவீதம் பேர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதும் அதிர்ச்சிக்குரிய தகவலாக உள்ளது. இதையடுத்து அதனைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக உலக கல்லீரல் அழற்சி தடுப்பு தினம் ஆண்டுதோறும் ஜூலை 28–ந்தேதி அனைத்து மருத்துவமனைகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நடப்பாண்டில் தமிழக அரசு மருத்துவமனைகளில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை, ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு கருத்தரங்குகள் நடைபெற்றன. அதனுடன் மருத்துவப் பணியாளர்களுக்கு ஹெபடைடிஸ் பி தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஆர். ஜெயந்தி, கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை இயக்குநர் டாக்டர் கலைவாணி, துணை முதல்வர் டாக்டர் சுகுணா பாய், பேராசிரியர்கள் ஷர்மிளா, அபர்ணா, தேவசேனா, மங்கள கீதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதுகுறித்து, ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஜெயந்தி கூறியதாவது:–

கல்லீரல் அழற்சி நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஆரம்ப நிலையிலேயே அப்பிரச்சினையைக் கண்டறிவதுதான் சிறந்த வழி. ஹெபடைடிஸ் பி வகை பாதிப்புகள் வராமல் தடுக்க தடுப்பூசிகள் பெரிதும் உதவும். எனவே, அனைவரும் அத்தடுப்பூசியை தேவை அறிந்து செலுத்திக் கொள்ள வேண்டும்.

ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கர்ப்பிணிகளுக்கு ஹெபடைடிஸ் பி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஹெச்ஐவி நோயாளிகள், டயாலிசிஸ் சிகிச்சையில் உள்ளவர்கள் உள்ளிட்டோருக்கு ஹெபடைடிஸ் பி மற்றும் சி தொற்று பரவ அதிக வாய்ப்புள்ளதால் அவர்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது.

ஹெபடைடிஸ் பி தொற்றால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு 24 மணி நேரத்துக்குள் ஹெபடைடிஸ் பி மற்றும் ஹெபடைடிஸ் பி இம்யூனோக்ளோபின் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு ஹெபடைடிஸ் பி வகை தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

இதேபோன்று, ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையிலும் கல்லீரல் அழற்சி தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

## புதுச்சேரியில் 98 பேருக்கு கொரோனா

**புதுச்சேரி, ஜூலை.29–**

புதுச்சேரியில் இன்று 98 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 72 பேர் புதுவையிலும் 20 பேர் காரைக்காலிலும் 1 பேர் ஏனாமிலும் 5 பேர் மாகேயிலும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இன்று கொரோனா பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் ஒருவரும் இறக்கவில்லை. 49 பேர் சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பினார்கள்.

புதுவையில் மொத்தம் 972 பேர் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களில் 153 பேர் புதுவையிலும் 16 பேர் காரைக்காலிலும் 6 பேர் ஏனாமிலும் 20 பேர் மாகேயிலும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். 777 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்திக் கொண்டு குணமடைந்து வருகிறார்கள்.

இதுவரை புதுவையில் மொத்தம் 1,20,725 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 1,17,961 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். இதுவரை புதுவையில் மொத்தம் 1,792 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் இறந்து விட்டனர்.

★ சபையை அமைதியாக நடத்த விடுங்கள்

★ மசோதாக்களை நிறைவேற்ற ஒத்துழைப்பு தாருங்கள்

## எதிர்க்கட்சி தலைவர்களை 2 மத்திய அமைச்சர்கள் சந்தித்து வேண்டுகோள்

புதுடெல்லி, ஜூலை.29–

**பார்லிமெண்டின் இரு அவைகளிலும் தொடர்ந்து 8 நாட்களாக எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருவதால், சபை முடங்கியது. இந்நிலையில் எதிர்க்கட்சி தலைவர்களை மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், பிரஹலாத் ஜோஷி இருவரும் சந்தித்தார்கள்.**

பார்லிமெண்ட் குளிர்கால கூட்டத்தொடர் கடந்த 19ந் தேதி தொடங்கி நடைபெற்று வருகின்றது. ஆகஸ்ட் 13ந் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்தக்கூட்டத்தில் பெகாஸஸ் இஸ்ரேல் சாப்ட்வேர் மூலம் டெலிபோன் ஒட்டுக் கேட்பு விவகாரத்தை அவைகளில் விவாதிக்க வேண்டுமென தொடர்ந்து 8வது நாளாக எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றன்.

இந்நிலையில் இன்று அவை ஒத்திவைக்கப்பட்டவுடன் இரு அவைகளின் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் மத்திய அமைச்சர்கள் பியூஷ் கோயல் மற்றும் பிரஹலாத் ஜோஷி பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இந்த சந்திப்பின்போது, பார்லிமெண்ட் கூட்டத்தை அமைதியாக நடத்தவும் மசோதாக்களை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்க்கட்சித் தலைவர்கள் தரப்பிலிருந்து பெகாஸஸ் பிரச்சினை, பணவீக்கம் மற்றும் விவசாயிகள் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்தப்பட்டது.

நேற்று சபையின் மையப்பகுதிக்கு ஓடிப்போய் நின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கையில் பதாகைகளை ஏந்திப் பிடித்தபடி கோஷம் எழுப்பினார்கள். இதனால் கூச்சல் குழப்பம் நிலவியது. இருந்தும் 3 மசோக்களை அரசு நிறைவேற்றியது.

எதிர்க்கட்சிகளின் செய்கை ஜனநாயகத்துக்கு நல்லதல்ல என்று அரசு கூறி, எந்த ஒரு பிரச்சனையையும் விவாதிக்கத் தயாராய் இருப்பதாகக் கூறியது. மக்களவையிலும் கூச்சல் குழப்பம் விளைவித்து எதிர்க்கட்சிகள் சபையை ஒத்தி வைக்கும் நிலையை உண்டாக்கியது.

இதற்கிடையில் ஐடி குழுவின் கூட்டம் ‘கோரம்’ இல்லாமல் ஒத்தி வைக்கப்பட்டது. எதிர்க்கட்சியிலிருந்து 9 எம்.பிக்கள் மட்டுமே பங்கேற்றதால், (இருக்க வேண்டிய எண்ணிக்கை 10) இக்கூட்டம் ரத்தானது.

## இந்தியாவுக்கு சென்றால் 3 ஆண்டுகள் பயணத் தடை: சவுதி அரேபியா எச்சரிக்கை

ரியாத், ஜூலை.29

கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகமுள்ள இந்தியா உள்ளிட்ட 16 நாடுகளுக்கு சென்றால் 3 ஆண்டுகள் பயணத் தடை விதிக்கப்படும் என குடிமக்களை சவுதி அரேபியா எச்சரித்துள்ளது.

இதுகுறித்து சவுதி உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

தடை செய்யப்பட்ட நாடுகளுக்கு பயணம் செய்வது கொரோனா தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் அரசின் புதுப்பிக்கப்பட்ட வழிமுறைகளை வெளிப்படையாக மீறுவதாகும். தடை விதிக்கப்பட்ட நாடுகளுக்கு சென்றுவிட்டு நாடு திரும்பும்போது அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். அதுமட்டுமின்றி அவர்கள் பயணம் மேற்கொள்வதற்கு 3 ஆண்டுகள் தடை விதிக்கப்படும்.

ஐக்கிய அரபு அமீரகம், லிபியா, சிரியா, லெபனான், ஏமன், ஈரான், துருக்கி, ஆர்மீனியா, எத்தியோபியா, சோமாலியா, காங்கோ, ஆப்கானிஸ்தான், வெனிசுலா, பெலாரஸ், இந்தியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு செல்ல சவுதி அரேபியா தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அனைத்து சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமிக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு

### வழக்கை தள்ளுபடி செய்ய ஐகோர்ட்டில் தமிழக அரசு மனு

சென்னை, ஜூலை 29–

ஆகம விதிகளின்படி குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்தவர்களை மட்டுமே அர்ச்சகர்களாக நியமிக்கவும், தமிழில் அர்ச்சனை செய்யக்கூடாது எனவும் உத்தரவிடக்கோரிய வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமெ சென்னை ஐ கோர்ட்டில் தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக சென்னை சிஐடி நகரை சேர்ந்த எஸ்.ஸ்ரீதரன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில், குறிப்பிட்ட பிரிவை சேர்ந்தவர்கள் மட்டும் தான் அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டும் என ஆகம விதிகளில் வகுக்கப்பட்டிருப்பதாகவும், அதை மீறி அர்ச்சகர் பயிற்சியை முடித்துவிட்டால் அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக நியமிப்போம் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளதாக குற்றம்சாட்டியுள்ளார்.

அறநிலைய துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கடந்த மாதம் அளித்த பேட்டியில், ஆட்சி அமைந்த 100 நாட்களுக்குள் அனைத்து சாதிகளை சேர்ந்தவர்களும் அர்ச்சகராக நியமிக்கப்படுவார்கள் என அறிவித்திருப்பது ஆகம விதிகளுக்கு முரணானது என மனுவில் குற்றம்சாட்டியுள்ளார். மேலுல் குறிப்பிட்ட சமூகத்தினரிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாக இருப்பதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் அர்ச்சனை செய்வதும், குறிப்பிட்ட பிரிவினரை தவிர மற்ற வர்கள் கருவறைக்குள் செல்வதும் ஆகம விதிகளுக்கு முரணானது என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 44 ஆயிரம் கோயில்கள் நிலையில், 500 கோவில்கள் மட்டுமே ஆகம விதிகளை பின்பற்றுவதாகவும், அங்குள்ள நியமனங்களில் ஆகம விதிகளில் பின்பற்ற வேண்டும் என உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தி இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த 500 கோயில்கள் தவிர 43500 கோவில்களில் தமிழக அரசின் திட்டப்படி அனைவரையும் அர்ச்கராக நியமித்துக் கொள்ளலாம் என்றும் யோசனை தெரிவித்துள்ளார். எனவே அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக நியமிக்க கூடாது எனவும், ஆகம விதிகளைப் பின்பற்றி குறிப்பிட்ட பிரிவினர் மட்டுமே அர்ச்சகராக நியமிக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி மற்றும் நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழ்நாடு அரசு தரப்பு வழக்கறிஞர் பி.முத்துக்குமார் ஆஜராகி, சிவாச்சாரியார்கள் வழக்கில் ஆகம விதிகள் படித்தவர்கள் அர்ச்சகர் ஆகலாம் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாகவும், அதற்கு முரணாக வழக்கு தொடரப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, ஆரம்பகாலகட்டத்திலேயே ஸ்ரீதரனின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

இதையடுத்து, உச்ச நீதிமன்ற உத்தரவை ஆய்வு செய்துவிட்டு, வாதங்களை முன்வைக்கும்படி மனுதாரருக்கு அறிவுறுத்தி வழக்கு விசாரணையை 3 வாரங்களுக்கு தள்ளிவைத்தனர்.



பெரும்பாக்கத்தில் மாநில ஜெயலலிதா பேரவை துணை செயலாளரும், ஒன்றிய கழக செயலாளருமான பெரும்பாக்கம் ராஜசேகர் தலைமையில், வாக்குறுதியை நிறைவேற்றாத தி.மு.க. அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## பள்ளிகள் திறப்பு பற்றி முதல்வர் முடிவு செய்வார்: அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி

தஞ்சாவூர், ஜூலை 29–

தமிழக முதல்வர் தெரிவிக்கும் கருத்துகளின் அடிப்படையில் பள்ளிகள் திறப்பு குறித்து முடிவு எடுக்கப்படும் என்றார் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

தஞ்சாவூர் அருகே கள்ளப்பெரம்பூர் பகுதியில் உள்ள செங்கழுநீர் ஏரியில் தூர் வாரும் பணியை வியாழக்கிழமை காலை பார்வையிட்ட அவர் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தது:

பள்ளிகளில் 9 12 ஆம் வகுப்புகள் திறப்பது குறித்து ஏற்கனவே துறை ரீதியாக ஆலோசனை செய்யப்பட்டது. கொரோனா மூன்றாவது அலை வந்தால் குழந்தைகள் பாதிக்கப்படுவர் என கூறப்படுகிறது. கரோனா தடுப்பூசி 12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இருந்தாலும், அது எந்த அளவுக்கு இருக்கும் என தெரியவில்லை.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படும் போது எந்த அளவு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு பள்ளி திறப்புக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டிய கட்டாய நிலை உள்ளது. தமிழக முதல்வர் எப்படி சொல்கிறாரோ அதனடிப்படையில் பள்ளிகள் திறப்பு குறித்து முடிவு செய்யப்படும்.

பள்ளிகளில் காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. அதற்கு முன்பாக பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட்டு, பணி நிரவல் செய்யப்பட்ட பிறகுதான் எங்கெங்கு காலிப்பணியிடங்கள் உள்ள விவரம் தெரியவரும். அதனை அடிப்படையாகக் கொண்டு காலிப்பணியிடங்களை நிரப்புவது குறித்து முடிவு எடுக்கப்படும்.

தனியார் பள்ளிகளைப்போல அரசுப் பள்ளிகளையும் இரண்டு ஆண்டுகளில் மேம்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி.


### வேப்கோ இந்தியா லிமிடெட்

CIN:L34103TN2004PLC054667

பதிவு அலுவலகம்:; ப்ளாட் எண் 3 (SP) 3-வது மெயின் ரோடு, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600 058.

Ph.91 44 42242000 , Fax .91 44 42242009 www.wabcoindia.com, email: cvcs.info.india@zf.com

**30 ஜூன் 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்**

(ரூ. லட்சங்களில் EPS தவிர)

| விவரங்கள் | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|
| | 30-06-2021 (தணிக்கை செய்யப்படாதது) | 31-03-2021 (தணிக்கை செய்யப்பட்டது) | 30-06-2020 (தணிக்கை செய்யப்படாதது) | 31-03-2021 (தணிக்கை செய்யப்பட்டது) |
| இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம் | 50,381.46 | 71,891.25 | 17,937.14 | 190,238.87 |
| வரி, தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன், நடப்பு காலத்திற்கு நிகர லாபம் (+) / நஷ்டம் (-) | 3,085.18 | 6,725.01 | (3,894.95) | 15,226.52 |
| தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (+) / நஷ்டம் (-) | 3,085.18 | 6,725.01 | (3,894.95) | 15,226.52 |
| தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (+) / நஷ்டம் (-) | 2,138.39 | 4,763.37 | (3,136.40) | 10,380.49 |
| நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப் பின் இதர விரிவான வருமானம்] | 2,089.74 | 4,997.28 | (3,156.31) | 10,185.59 |
| சமபங்கு மூலதனம் | 948.38 | 948.38 | 948.38 | 948.38 |
| ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக முந்தைய கணக்கு ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையின்படி) | | | | 198,691.96 |
| ஒரு பங்கு சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) அடிப்படை | 11.27 | 25.11 | (16.54) | 54.73 |
| டைல்யூட்டட் | 11.27 | 25.11 | (16.54) | 54.73 |

**குறிப்புகள் :**

1. மேற்கண்ட ஜூன் 30, 2021 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான நிதி நிலை முடிவுகள் தணிக்கையாளர் குழுவினால் மறுபார்வையிடப்பட்டு, அவர்கள் பரிந்துரையின்படி, இயக்குனர் குழு ஜூலை 28, 2021 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கண்ட ஜூன் 30, 2021 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் நிறுவன தணிக்கையாளர்களால் வரையறைக்குபட்ட ஆய்வுக்குட்பட்டது.
2. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133, மாற்றப்பட்ட இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டு விதிகள் 2015, மற்றும் இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டுகள் (இண்ட் ஏஎஸ்)-க்கு ஏற்றவாறு நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
3. செயல்பாடுகளின் வருவாய் பின்வருவனவற்றினை உள்ளடக்கியுள்ளது.

| விவரங்கள் | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|
| | 30-06-2021 (தணிக்கை செய்யப்படாதது) | 31-03-2021 (தணிக்கை செய்யப்பட்டது) | 30-06-2020 (தணிக்கை செய்யப்படாதது) | 31-03-2021 (தணிக்கை செய்யப்பட்டது) |
| பொருட்கள் விற்பனை | 44,404.53 | 66,431.59 | 11,655.20 | 166,642.54 |
| மற்றவைகள் | 4,787.18 | 4,800.73 | 4,941.36 | 19,707.47 |
| **மொத்தம்** | **49,191.71** | **71,232.32** | **16,596.56** | **186,350.01** |

4. கம்பெனி இயக்கம் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் மற்றும் அது சம்பந்தமான சேவைகள் சம்பந்தப்பட்ட ஒரு துறையை மட்டும் சார்ந்தது.
5. 31 மார்ச், 2021 அன்று முடிவடைந்த முந்தைய நிதியாண்டில், ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதி அறக்கட்டளை ("அறக்கட்டளை")யில் இருந்த குறித்த கால ஊழியர்கள் நிலுவைத் தொகை வழங்கல் மற்றும் தீர்த்தலில் சில முறைகேடுகள் நடந்திருக்க கூடிய வாய்ப்பு இருப்பதாக நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது. இது தொடர்பாக அறக்கட்டளை மற்றும் நிறுவனத்திலிருந்து குறித்த கால ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட பண பட்டுவாடாக்களை விசாரிக்கவும் / உண்மைத்தன்மையை கண்டறியவும், மேற்கொள்ள வேண்டிய பிற நடவடிக்கைகளையும் நிர்வாகம் பரிசீலித்து வருகிறது. இச்சூழலில் முதற்கட்ட மதிப்பீடாக ரூ. 500 லட்சம் தொகையை செலவாக முந்தைய ஆண்டில் நிர்வாகம் பதிவு செய்துள்ளது. மேற்கொண்ட நிபுணர்களின் ஆய்வுப் பணியில் மதிக்கத்தக்க முன்னேற்றம் உள்ளதாலும், அதன் அடிப்படையில் நடந்த பரிசீலனையின்படியும், கூடுதல் செலவினம் பதிவிட தேவை இல்லை என நிர்வாகம் தீர்வு செய்துள்ளது. நிபுணர்களின் இந்த ஆய்வுப்பணி மிக விரைவில் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தணிக்கையாளர்களின் அறிக்கையில் இது குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.
6. மார்ச் 31, 2021ல் முடிவடைந்த காலாண்டிற்கான கணக்குகள் முழு நிதியாண்டிற்கு தணிக்கை செய்யப்பட்ட கணக்கு மற்றும் தணிக்கை செய்யப்படாத வெளியிடப்பட்ட கணக்கு ஆகியவற்றுடன் சமன்செய்யப்பட்ட கணக்குகளாக மூன்றாவது காலாண்டு வரைக்கான தற்போதைய கணக்குடன் சம்மந்தப்பட்ட நிதியாண்டில் குறைந்தபட்ச ஆய்வுக்கு உட்பட்டதாகும்.
7. முந்தைய காலாண்டுக்கான / காலத்திற்க்கான தொகைகள் நடப்பு காலாண்டுக்கான/ காலத்திற்கான காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டது.

சென்னை
28.07.2021

இயக்குநர் குழு சார்பாக
**M லக்ஷ்மி நாராயன்**
சேர்மன்



**பெயர் மாற்றம்**

DENNIS RAJ, தந்தை பெயர்: Jesudoss Dennis, பிறந்த தேதி: 31.10.1958, நெ.34/A, வஜ்ரவேல் நகர், 2வது தெரு, கொளத்தூர், சென்னை – 600 099, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **D.E.RAJ,** என்று அழைக்கப்படுகிறேன்.

DENNIS RAJ

**பெயர் மாற்றம்**

MANICKAM PILLAI, தந்தை பெயர்: Ayyasamy Pillai, பிறந்த தேதி:14.06.1932, நெ.61B, ஆலப்பாக்கம் மெயின் ரோடு, ஆலப்பாக்கம், போரூர், சென்னை – 600 116, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **AYYASAMY MANICKAM PILLAI,** என்று அழைக்கப்படுகிறேன்.

MANICKAM PILLAI

**பெயர் மாற்றம்**

AKILAMARY, கணவர் பெயர்: A.S.Aravind Rozario, பிறந்த தேதி:19.11.1983, சொந்த மாவட்டம்: கன்னியாகுமரி மாவட்டம்), நெ.1/48, 1வது பிளாக், 1வது மெயின் ரோடு, கவியரசு கண்ணதாசன் நகர், கொடுங்கையூர், சென்னை – 600 118, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **M.AKILAMARY,** என்று அழைக்கப்படுகிறேன்.

AKILAMARY

**பெயர் மாற்றம்**

Nair Shreekumar Murlidharan, தந்தை பெயர்: Muralidharan, பிறந்த தேதி: 12.11.1997, நெ.12, கிறிஸ்தி இல்லம், பழைய பங்களா தெரு, சிந்தாதிரிபேட்டை, சென்னை – 600 002, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Nair Shreekumar Muralidharan,** என்று அழைக்கப்படுகிறேன்.

Nair Shreekumar Murlidharan